**செய்தி வெளியீடு எண்: 420** **நாள்: 01.07.2018**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி திரு.கே. பழனிசாமி அவர்கள் இன்று (1.7.2018) கிருஷ்ணகிரி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் பள்ளி கலையரங்கம் மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டடங்களை திறந்து வைத்து ஆற்றிய உரை

மாண்புமிகு இதயதெய்வம்புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி,கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கலையரங்கம் மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டடங்களின் திறப்பு விழாவில் கலந்துக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு சிறப்பான கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு துணை முதலமைச்சர் **திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை உரையாற்றிய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே, சுருக்கமாக பேசி அமர்ந்திருக்கின்ற மாவட்ட அமைச்சர் மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் **திரு.பா.பாலகிருஷ்ணரெட்டி அவர்களே!**

இந்தக் கலையரங்கம் சிறப்பாக அமைவதற்கு உறுதுணையாக இருந்த முன்னாள் அமைச்சர் திரு.கே.பி.முனுசாமி அவர்களே,

மரியாதைக்குரிய கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.அசோக்குமார் அவர்களே!

மரியாதைக்குரிய ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி. நா.மனோரஞ்சிதம் நாகராஜ் அவர்களே!

மரியாதைக்குரிய பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.ராஜேந்திரன் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்களே,

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.தங்கமணி அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.மைத்ரேயன் அவர்களே,

முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு.கோவிந்தராஜ் அவர்களே,

மற்றும் இந்த நிகழ்ச்சியில் தலைமையுரை ஆற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, நிகழ்ச்சியிலே பங்கு பெற்றுள்ள கல்வித் துறை அலுவலர்களே,

பெற்றோர் ஆசிரியர் கழகத்தினுடைய நிர்வாகிகளே,

ஆசிரியர்களே,

பெற்றோர்களே!

மாணவச் செல்வங்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

'புதியதாக ஒரு பள்ளிக்கூடத்தைத் திறந்தால் குறைந்தது 10 சிறைச்சாலைகளையாவது மூட வேண்டியிருக்கும் என்ற பழமொழிக்கு ஏற்ப மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் அதிகமான பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டது. அதனால்தான் குற்றங்கள் மிகக்குறைவாக உள்ள மாநிலமாகவும், அமைதிப் பூங்காவாகவும் தமிழ்நாடு திகழ்கிறது. அந்தப் பெருமைக்கு முழு காரணமாக இருப்பது பள்ளிக்கூடங்களும், சேவை உணர்வுமிக்க ஆசிரிய பெருமக்களும்தான்.

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க ஏட்டுக்கல்வி மட்டும் இல்லாமல், சிறந்த திறன் கொண்ட வாழ்க்கைக் கல்வி தான் ஒரு மாணவனை சிறந்த மனிதனாக உருவாக்கும்.

தேர்வுக்காக படிக்காமல் வாழ்வுக்காக படிக்கும் கல்விதான் இந்தக் காலகட்டத்திற்கு மிகவும் தேவை. இன்று அரசுப் பள்ளிகளில் இதன் அடிப்படையில் கல்வி வல்லுநர்களைக் கொண்டு புதிய பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மத்திய, மாநில போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் அளவிற்கு புதிய பாடத்திட்டங்கள் அமைந்திருப்பதாக ஆசிரியர்களும், மாணவர்களும் பாராட்டுகிறார்கள். பேருக்காக பாடத்திட்டங்களை தயாரிக்காமல், மாணவச் செல்வங்களான உங்களின் உயர்வுக்காக புதிய தொழில்நுட்பத்துடன் இந்தப் பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

‘**மாற்றம் என்பது மானிடத்தத்துவம்**’ என்பது பழமொழி. ‘**மாற்றம் என்பது மாணவர் தத்துவம்**’ என்பதுதான் புதிய மொழி. ஒரு நாட்டின் மலர்ச்சியும், எழுச்சியும் – ஒவ்வொரு மாணவனிடமிருந்துதான் தொடங்குகிறது.

‘**இந்தக் காட்டில் எந்த மூங்கில் புல்லாங்குழல்**’ என்ற ஒரு புதுக்கவிதை இருக்கிறது. எதிரே அமர்ந்திருக்கின்ற உங்களில் பலர் எதிர்காலத்தில் அறிவியல் மேதையாகவும், அரசியல் தலைவராகவும், ஆட்சியராகவும், உயர் அலுவலர்களாகவும், நீதிபதிகளாகவும், மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் உயரலாம். வகுப்பறையில் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியரை விட, கற்றலைத் தூண்டுகின்ற ஆசிரியரை விட, ஒரு மாணவனின் சுய சிந்தனையை தட்டி எழுப்புகின்ற, சுடர்விட்டு மிளிர செய்கின்ற ஆசிரியரைத் தான் இன்றைய சமுதாயம் வரவேற்கிறது. ஆகவே கற்றல், கற்பித்தல் நிகழ்வுகளையும் தாண்டி சுய சிந்தனையை வளர்தெடுக்கும் கல்விதான் இன்றைக்கு நமக்குத் தேவை. அத்தகைய கல்வி முறையை உள்ளடக்கித்தான், இன்றைய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் புதிய பாட நூல்களைப் பார்த்து உணர்ந்திருப்பீர்கள்.

இன்றைக்கு அரசுப்பள்ளி, தனியார் பள்ளி வித்தியாசம் காணமுடியாத அளவிற்கு அரசுப்பள்ளிகளின் தரமும், தோற்றமும் மாறியுள்ளது என்றால், அதற்கு வித்திட்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

இன்றைக்கு அரசுப்பள்ளிகளின் கற்றல், கற்பித்தல் முறையில் மிகப்பெரிய மாற்றமும், மறுமலர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வகுத்துக் கொடுத்த கல்வித் திட்டங்கள்தான் இந்த மறுமலர்ச்சிக்கு காரணம் என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.

மாண்புமிகு அம்மாவின் வழியில், தமிழ்நாடு அரசு அனைவருக்கும் தரமான கல்வியை அளிப்பதற்கு உறுதி பூண்டுள்ளது. 2018–19 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், பள்ளிக் கல்வித்துறைக்கு மிக அதிக அளவு ஒதுக்கீடாக 27ஆயிரத்து 205 கோடியே 88 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதே இதற்கு சான்றாகும்.

மிகத் தெளிவான திட்டமிடலின் காரணமாக
10, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான

பொதுத் தேர்வு நடைபெறும் தேதிகளும், இந்த வகுப்புகளுக்குரிய பொதுத் தேர்வு முடிவு அறிவிக்கப்படும் தேதிகளும், கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே கொடுக்கப்பட்டதன் காரணமாக மாணவர்களின் மன அழுத்தம் குறைக்கப்பட்டுள்ளது.

எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் மாணவ, மாணவியர்களுக்கான பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மற்ற மாநிலங்களில் உள்ள கல்வித்துறை, நமது கல்வித் திட்டங்களில் ஒரு சிலவற்றை தங்களின் மாநிலங்களிலும் செயல்படுத்தி வருகின்றன என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா நான்கு இணை சீருடை, மலைப்பிரதேசங்களில் பயிலும் மாணவர்களுக்கு கம்பளிச் சட்டை, விலையில்லா மடிக்கணினிகள், இடைநிற்றலை குறைத்திட சிறப்பு ஊக்கத்தொகை, விலையில்லா புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, காலணி, விலையில்லா வண்ணப் பென்சில், விலையில்லா கிரையான்ஸ், விலையில்லா புவியியல் வரைப்படம், விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், விலையில்லா மிதிவண்டி, கட்டணமில்லா பேருந்து பயண அட்டை, மதிய உணவு மற்றும் வருவாய் ஈட்டும் தாய், தந்தையை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களுக்காக, 2018–19 ஆம் ஆண்டில் ஆயிரத்து 967 கோடியே 47 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசு அம்மாவினுடைய அரசு.

அரசு பொதுத் தேர்வுகளில் அறிவிக்கும் தரமுறை கைவிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை பல மாணாக்கர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மன அழுத்தத்தைக் குறைத்து மனநிம்மதியை அளித்துள்ளது.

2017–18ம் கல்வியாண்டு முதல் 11ம் வகுப்பு பொதுத் தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2017–18ம் கல்வியாண்டு முதல் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய 20 லட்சம் மாணவர்களுக்கு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட 2 நிமிடத்தில் குறுஞ்செய்தி மூலம் தேர்வு முடிவுகள் அனுப்பப்பட்டது.

மார்ச் 2017 பொதுத் தேர்வு முதல் மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயர் தமிழில் அச்சிட்டு வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசுத் தேர்வுகள் துறையில் மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களைப் பாதுகாக்கவும், உண்மைத்தன்மை அறிவதற்கும், மின் ஆவண காப்பக வசதி முதன் முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளச்சிக்கு ஏற்ப 3090 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 2939 மேல்நிலைப் பள்ளிகளில்

உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள் (Hitech Labs) 438 கோடி செலவில் ஏற்படுத்தப்பட உள்ளது.

மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் 412 மையங்களில் V-SAT தொழில்நுட்பத்தில் நடைபெற்று வருகின்றன.

இத்தோடு நில்லாமல், இந்திய கல்வித் துறை வரலாற்றிலேயே இதுவரை நடைபெறாத சாதனையாக, பள்ளிக் கல்வித் துறை, தமிழகமெங்கும் 11 இடங்களில் போட்டித் தேர்வுகளுக்காக, உண்டு உறைவிட பயிற்சி மையங்களை நடத்தி வருகிறது.

தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசுப் பள்ளிகளிலும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை ஆயிரத்து 72 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் புதிய பள்ளிக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதி ஆகியவை அரசுப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2017–18 ஆம் ஆண்டில் 968 கட்டடப் பணிகள் 66 கோடியே 11 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2013–ஆம் ஆண்டு முதல் 2016–17ஆம் ஆண்டு வரை 227 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 51 பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

2017–18ஆம் ஆண்டில் 20 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

979 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 504 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட அரசு அம்மாவினுடைய அரசு.

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மாணவர்கள் அதிக கட்டணம் செலுத்தாமல் குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி பயிலுவதற்காக அம்மா அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த காலத்தில் 65 கலை மற்றும் அறிவியில் கல்லூரிகளை கொடுத்தார்கள். அதற்குப் பின்பு அம்மா வழியிலே செயல்படும் அம்மாவினுடைய அரசு மாணவர்களின் நலன் கருதி, கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியை கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது, பாலிடெக்னிக் கல்லூரி, ஐடி கல்லூரி, மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற ஏராளமான கல்லூரிகளை கொடுத்து, சாதாரண ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியர்கள் கூட உயர்கல்வி குறைந்த கட்டணத்தில் கல்வி பயிலக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்த அரசு அம்மாவினுடைய அரசு. அத்தனை திட்டங்களையும் இந்த மாணவ செல்வங்களுக்கு கொடுத்ததன் வாயிலாக 2011 அம்மா ஆட்சிப் பொறுப்பேற்றபொழுது, 100க்கு 21 சதவீதம் உயர்கல்வி படித்திருந்த மாணவர்கள், இன்றையதினம் இந்திய அளவிலேயே உயர்கல்வி படிக்கின்ற மாநிலத்தில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 100க்கு 46.94 சதவீதம் மாணவர்கள் உயர்கல்வி படித்து, இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இந்த கல்விப்புரட்சியானது தனியார் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களைக்கூட அரசுப்பள்ளிக்கு விரும்பி வந்து சேருகின்ற மாற்றத்தை உருவாக்கும். கல்வியை கசப்பாக, கடுமையாக வழங்கும் முறையை மாற்றி, மாணவர்களுக்கு கல்வியை இனிமையாக, இலகுவாக அளிக்கும் முறையே அதற்கு காரணம். முதலில் கல்வியைப் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும், பிறகுதான் கற்றல் கற்பித்தல் பணியே தொடங்க வேண்டும் என்று ஆசிரியப் பெருமக்களை இந்த தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

‘‘**கல்லாதவர்களே தமிழகத்தில் இருக்கக்கூடாது என்பதே எனது கோட்பாடகவும், எனது அரசின் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது”, என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.**

இதனை மெய்ப்பிக்கும் வகையில், இந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தொடர் முயற்சிகளின் பயனாக, தொடக்க நிலை வகுப்புகளில் 2011–12 ஆம் ஆண்டில் 99.63 நிகர சேர்க்கை விகிதம் 2017–18ல் 99.86 ஆக உயர்ந்தது. உயர்தொடக்க நிலை வகுப்புகளில் 2011–12ஆம் ஆண்டில் 98.88 ஆக இருந்த நிகர சேர்க்கை விகிதம் 2017–18ல் 99.22 ஆக உயர்ந்துள்ளது. இடைநிற்றல் விகிதம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது.

இந்த சாதனைக்கு முக்கிய காரணமானவர்கள் ஆசிரியர்கள்.

நமது தாய்த் திருநாட்டின் வருங்கால நம்பிக்கையாகத் திகழும் மாணவச் செல்வங்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி, அவர்தம்

எதிர்கால வாழ்க்கையை செம்மைப்படுத்தி, அவர்களை சிறந்த மனிதர்களாக்கும் பெருமை ஆசிரியர் சமுதாயத்தையே சார்ந்ததாகும்.

மன்னனுக்கு அவனது நாட்டில் மட்டும்தான் பெருமை உண்டு, ஆனால் கல்வி உடையவனுக்கு சென்ற இடங்களில் எல்லாம் பெருமை வந்து சேரும். எனவே, மன்னனை விடவும் கற்றவனுக்கே பெருமை உண்டு என்று கல்வியின் சிறப்பைப் பற்றி மூதுரை கூறுகிறது.

இதை கூறுகின்ற போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.
ஒரு நாட்டின் இளவரசிக்கு சுயம்வரம் நடத்த திட்டமிட்டான் அந்த நாட்டின் மன்னன்.

'அழியாத செல்வம் உடையவர்கள் சுயம்வரத்தில் கலந்து கொண்டு, தன்னிடமுள்ள அழியாத செல்வம் எது ? என்பதை அவர்கள் இளவரசியிடம் நிருபிக்க வேண்டும்.
அப்படி நிருப்பித்த ஆண் மகனுக்கு
இளவரசி மணமாலை இடுவார்' என அறிவிக்கப்பட்டது.
இந்த செய்தி காட்டுத் தீ போல பரவியது.
எல்லா நாட்டு இளவரசர்களும் இளவரசியை மணக்க போட்டி போட்டுக் கொண்டு வந்தனர்.

அவர்களில் ஒரு ராஜகுமாரர், உலகத்திலேயே விலை மதிப்பற்ற ஒரு அரிய வைரக்கல்லை கொண்டு வந்து இளவரசியின் காலடியில் வைத்தார்.

இப்படியாக ராஜகுமாரர்கள் ஒவ்வொருவரும் விலைமதிப்பற்ற பொருள்களையும், தன்னுடைய நாட்டின் பரப்பு, செல்வ வளம் ஆகியவற்றையும் பட்டியலிட்டு காட்டினர்.

அப்பொழுது ஒரு இளைஞன் சுயம்வரம் நடக்கும் மண்டபத்திற்குள் வந்தான்.
அவன் சாதாரண உடை அணிந்திருந்தான்.
அவனை முதலில் உள்ளே அனுமதிக்க மறுத்தனர். ஆனால், அந்த நாட்டு மன்னர் அவனை உள்ளே அனுமதிக்கச் சொன்னார்.
அந்த மன்னர் அவனிடம், ''உன்னிடம் விலைமதிப்பில்லா செல்வம் என்ன உள்ளது ?''
என்று கேட்டார்.
உடனே அந்த இளைஞன் ஓர் ஓலைச் சுவடியை மன்னனிடம் அளித்தான்.
உடனே மன்னர், அதை வாங்கி இளவரசியிடம் கொடுத்தார். இளவரசி அதைப் பிரித்துப் பார்த்தாள்.

அதில்,  திருக்குறள் அனைத்தும் எழுதப்பட்டிருந்தது.   உடனே, இளவரசி அந்த இளைஞனிடம்,

''விலை மதிப்பற்ற செல்வத்தை நான் கேட்டால்
நீ   திருக்குறள் ஓலைச் சுவடிகளைக் கொண்டு வந்திருக்கிறாயே ?'' என்றாள்.

'திருக்குறள்  வாழ்வியலைக் கற்றுத் தரும் கருவூலம்.
எல்லா செல்வத்திலும் கல்விதானே அழியாத செல்வம் என்பதால்
திருக்குறளும் விலைமதிப்பற்ற செல்வம்தான்' என்றான் அந்த இளைஞன்.

உடனே இளவரசி, 'அது எப்படி அழியாத செல்வமாகும் ?' என்று வினவினாள் இளவரசி.
'நீங்கள் யாருக்கு வேண்டுமானாலும் செல்வத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கலாம்.
அள்ள அள்ள அந்த செல்வம் குறைந்து விடும்.   ஆனால், அள்ள அள்ள குறையாத செல்வம் கல்வி ஒன்று தான்' என்றான் அந்த இளைஞன். இதைக் கேட்டு மகிழ்ந்த இளவரசி
''நீங்கள் போட்டியில் வெற்றி பெற்றுவிட்டீர்கள்,
நீங்கள் யார் என்று தெரிந்து கொள்ளலாமா ?'' என்று கேட்டாள்.

'அள்ள அள்ள குறையாத கல்விச் செல்வத்தை அள்ளிக் கொடுக்கும் ஒரு ஆசிரியன் நான்' என்றான் அந்த இளைஞன். அந்த ஆசிரியருக்கும் இளவரசிக்கும்
திருமணம் நடைபெற்றது.
அந்த இருவரும் பல ஆண்டு காலம் நாட்டை ஆண்டு, ஊர்கள்தோறும் பள்ளிகளைத் திறந்து மக்களின்
கல்விக் கண்களைத் திறந்தனர்.

ஆகவே கல்வி என்பது நெருப்பால் வேகாது; கள்வர்களால் கொள்ளையடிக்க முடியாது;
கொடுக்க கொடுக்கப் பெருகுமே தவிர குறையாது.

எனவே, மாணவர்களே! உங்கள் வாழ்வின்ஆக்கமும் ஊக்கமும் நீங்கள் பெறும் கல்வியிலேயே இருக்கிறது.

ஆகவே, நீங்கள் பெறும் கல்வியால் நீங்கள் மேன்மையுறுவது மட்டுமல்ல, இந்தச் சமுதாயத்தையும் மேன்மையுறச் செய்ய உழைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

ஆசிரியர்களின் கற்பித்தல் தேவைகளையும், மாணவர்களின் கற்றல் தேவைகளையும் நிறைவுச் செய்துக் கொடுக்க மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு இருக்கிறது. படிப்பதும், உயர்வதும், பெற்றோரைக் காப்பாற்றுவதும், நாட்டுக்கு நல்ல பெயர் ஈட்டித்தருவதும் உங்கள் பணி. உங்களை உருவாக்குவது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சிப்பணி என்பதைத் தெரிவித்துக் கொண்டு,

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித் தலைவரின் புகழ்!

தொடர்க புரட்சித்தலைவி அம்மாவின் பொற்கால ஆட்சி!

ஆகவே, இன்றைக்கு ஒரு பொன்னான நாள். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவி எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த பொற்காலத்தில், தான் சிறு வயதிலே பசியால் வாடிய துன்பத்தை தமிழகத்திலே பிறந்த எந்த குழந்தையும் பசியால் வாடக்கூடாது என்பதற்காக சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்த நாள், இந்த இனிய நாள். இந்த இனிய நன்னாளிலே கலையரங்கம் மற்றும் கூடுதல் வகுப்பறை திறப்பு விழா இந்த இனிய நிகழ்ச்சியிலே பல மணிநேரம் காத்திருந்து, பொறுமை காத்த அத்தனை மாணவ செல்வங்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை, 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை, சீருடை மாற்றம் கொண்டு வரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த தருணத்தில் தெரிவித்து, இப்பொழுது தனியார் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு இணையாக நம்முடைய மாணவ செல்வங்கள் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த சீருடை மாற்றத்தை கொண்டு வந்திருக்கின்றோம். அதேபோல், 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை, 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை, அணிகின்ற அந்த மாணவ, மாணவியர்களுடைய சீருடை அனைவரும் பாராட்டுதலுக்குரிய சீருடையாக இருக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து, விடை பெறுகிறேன்.

நன்றி!

வணக்கம்!

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**